# எய்ம் பதின்ம மேல்நிலைப் பள்ளி. ஆரணி.

வகுப்பு: 10 முதல் இடைப்பருவத் தேர்வு மதிப்பெண்: 100

G2, G3, B2, தமிழ் (இயல் 1-5)

B3, B4 பகுதி – 1

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: -** 15 x 1 = 15

1. காய்ந்த இலையும் காய்ந்த தோகையும் நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது
   அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்
   இ) சருகும் சண்டும் ஈ) தாளும், ஓலையும்
2. கேட்டவர் மகிழப்பாடிய பாடல் இது – தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே -
   அ) பாடிய; கேட்டவர் ஆ) பாடல்; கேட்டவர்
   இ) பாடல்; பாடிய ஈ) கேட்டவர்; பாடிய
3. மரமது வழியே சென்று வளமனைக் கேகும் போது – எனும் தனிப்பாடல் திரட்டின் ஆசிரியர் அ) தேசிக விநாயகனார் ஆ) உதய சங்கர் இ) சுந்தர கவிராசன் ஈ) இராமலிங்கம்
4. 'உனதருளே பார்ப்பன் அடியேனே' யாரிடம் யார் கூறியது?
   அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்
   இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்
5. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
   அ) இலா ஆ) சீலா இ) துலா ஈ) குலா
6. வானில் பல பால்வீதிகள் உள்ளன என நிருபிக்கப்பட்ட ஆண்டு ______.
   அ) 2004 ஆ) 1964 இ) 1934 ஈ) 1924
7. அருந்துணை என்பதைப் பிரித்தால் ______.
   அ) அரு + துணை ஆ) அருமை + துணை
   இ) அருமை + இணை ஈ) அரு + இணை
8. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ______ இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர்______. அ) அமைச்சர், மன்னன் ஆ) மன்னன், இறைவன் இ) அமைச்சர், இறைவன் ஈ) இறைவன், மன்னன்
9. வினாவிற்கு விடையாக இன்னொரு வினாவைக் கேட்பது ______ விடை.
   அ) நேர் விடை ஆ) ஏவல் விடை
   இ) வினாஎதிர் வினாதல் விடை ஈ) இனமொழி விடை
10. கொன்றைக் கோமான் கொற்கையம் பெருந்துறை என்னும் பாடல் இடம்பெறும் நூல் அ) அகநானூறு ஆ) ஐங்குறுநூறு இ) புறநானூறு ஈ) பரிபாடல்
11. கா.ப.செய்குதம்பிப் பாவலர் பிறந்த ஆண்டு ______.
    அ) 1784 ஆ) 1950 இ) 1874 ஈ) 1876

பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளி:

செந்தீச் சுடரிய ஊழியும் பனியொடு
தண்பெயல் தலைஇய ஊழியும்; அவையிற்று
உள்முறை வெள்ளம் மூழ்கி ஆர்தருபு
மீண்டும் பீடு உயர்வு ஈண்டி அவற்றிற்கும்

12. இவ்வடிகள் இடம்பெற்றுள்ள நூல் அ) புறநானூறு ஆ) திருவிளையாடற்புராணம் இ) பரிபாடல் ஈ) பதிற்றுப்பத்து

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

13. இப்பாடலின் ஆசிரியர் ______.
அ) குலசேகராழ்வார் ஆ) மோசிகீரனார்
இ) பரஞ்சோதி முனிவர் ஈ) கீரந்தையார்

14. இப்பாடலில் அமைந்துள்ள எதுகையை எடுத்து எழுதுக.
அ) தண்பெயல், தலைஇய ஆ) தண்பெயல், மீண்டும்
இ) செந்தீச், சுடரிய ஈ) ஊழியும், மூழ்கி

15. ஊழி என்பதன் பொருள் ______.
அ) முறை ஆ) வானம் இ) சிறப்பு ஈ) யுகம்

பகுதி – 2 (21 - கட்டாய வினா)

**II. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி: - 4 x 2 = 8**

16. தமிழ்நாட்டில் மட்டும் விளையக்கூடிய சிறுகூலங்களின் பெயர்களை எழுதுக.

17. விடைக்கேற்ற வினா அமைக்க.
அ) ஜப்பானில் சாப்ட் வங்கி உருவாக்கிய இயந்திர மனிதன் பெப்பர்
ஆ) பரஞ்சோதி முனிவர் பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்.

18. செய்கு தம்பி பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக?

19. "சீசர் எப்போதும் என் சொல் பேச்சைக் கேட்பான். புதியவர்களைப் பார்த்துக் கத்துவானே தவிர கடிக்க மாட்டான்" என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றிப் பெருமையாகக் கூறினார் - இதில் உள்ள திணை வழுக்களைத் திருத்தி எழுதுக.

20. குறிப்பு வரைக 'சதாவதானம்'.

21. பல்லார் – எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க: - 5 x 2 = 10**

22. கீழ்க்காணும் சொற்களின் கூட்டப் பெயர்களை எழுதுக.
குவியல், குலை, மந்தை, கட்டு.

| சொல் | | | |
|---|---|---|---|
| கல் | புல் | பழம் | ஆடு |

23. அகராதி காண்க. அ) செறு
ஆ) மன்றல்

24. கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.
அ) இயற்கை – செயற்கை ஆ) சிறு – சீறு

25. பகுபத உறுப்பிலக்கணம் தருக. தணிந்தது

26. கலைச் சொற்கள் தருக. அ) Intellectual ஆ) Homegraph

27. தொடரில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.
அ) வாழ்க்கைப் பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.
ஆ) கல்வியே ஒருவற்கு உயர்வு தரும்.

28. தா – என்னும் வேர்ச்சொல்லினைக் கொண்டு பெயரெச்சத் தொடர், வினையெச்சத் தொடர் உருவாக்குக.

**IV. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி: - 2 x 3 = 6**

29. பெப்பர் – குறிப்பு வரைக.

30. உரைபத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

மொழி பெயர்த்தல் என்ற தொடரை தொல்காப்பியர் மரபியலில் குறிப்பிட்டுள்ளார். மொழிப்பெயர்ப்பைக் கல்வியாக ஆக்குவதன் மூலம் அனைத்துலக அறிவையும் நாம் எளிதாக பெறமுடியும். மொழிபெயர்ப்பு முயற்சிகள் சாகித்திய அகாதெமி, தேசியபுத்தக நிறுவனம் ஆகியவற்றின் மூலம் செய்யப்பட்டன. பிறமொழி இலக்கியங்களை அறிந்துகொள்ளவும் அவைபோன்ற புதிய படைப்புகள் உருவாகவும் மொழிபெயர்ப்பு உதவுகிறது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

அ) மொழிப் பெயர்த்தல் என்ற தொடரை முதன்முதலில் பயன்படுத்தியவர் யார்?

ஆ) மொழிபெயர்ப்பினை தொடங்கிய நிறுவனங்கள் யாவை?

இ) அனைத்துலக அறிவை நாம் எவ்வாறு பெறமுடியும்.

31. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்து சிந்தனைகளை முன் வைத்து எழுதுக.

பிரிவு – 2

எவையேனும் இரண்டனுக்கு விடையளி: - (34 - கட்டாய வினா) **2 x 3 = 6**

32. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

33. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.

34. அடிபிறழாமல் எழுதுக.

அ) புண்ணியப் புலவீர் – எனத் தொடங்கும் திருவிளையாடற்புராணம் பாடல். (அல்லது)

ஆ) வாளால் அறுத்து – எனத் தொடங்கும் பெருமாள் திருமொழி பாடலை எழுதுக.

பிரிவு – 3

எவையேனும் இரண்டனுக்கு விடையளி: - **2 x 3 = 6**

35. வழுவின் வகைகளை எழுதி எடுத்துக்காட்டு தருக.

36. நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்
நச்சு மரம்பழுத் தற்று - இக்குறட்பாவில் பயின்று வந்து அணியை விளக்குக.

37. அலகிடுக.
ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்.

**V.** குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்: - **5 x 5 = 25**

38. அ) மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்தரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக. (அல்லது)

ஆ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

39. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



40. குமரன் தன் தந்தை வேலு என்பவரிடம் நூலகத்தில் உறுப்பினர் ஆக வேண்டினான். அவரும் குமரனிடம் 300 ரூபாயும், 15 காந்தி தெரு, மாமண்டூர் காஞ்சிபுரம் மாவட்டம் என்ற முகவரியிட்ட அடையாளச் சான்றையும் கொடுத்தார். கிளை நூலகத்திற்கு சென்ற குமரனாக, தேர்வர் தன்னைக் கருதி கொடுக்கப்பட்ட நூலக உறுப்பினர் படிவத்தை நிரப்புக.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

41. பள்ளியிலும், வீட்டிலும் நீங்கள் நடந்து கொள்ளும் முறைகளை பட்டியலிடுக.

42. மொழிபெயர்க்க:

அ) Malar : Devi switch of the lights when you leave the room.
Devi : Yeah, we have to save electricity.
Malar : Our nation spends a lot of electricity for lighting up on streets in the night.
Devi : Who knows in future our country may launch artificial moons to light our night time sky!
Malar : I have read some other countries are going to launch these types of illumination satellites near future.
Devi : Superb news! If we launch artificial moons, they can assist in disaster relief by beaming light on areas the lost power.

(அல்லது)

ஆ) நயம் பாராட்டுக.

நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்
நேர்ப்பட வைத்தாங்கே
குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு
கோல வெறிபடைத்தோம்;
உலாவும் மனச்சிறு புள்ளினை எங்கனும்
ஓட்டி மகிழ்ந்திடுவோம்;
பலாவின் கனிச்சுளை வண்டியில் ஓர் வண்டு
பாடுவதும் வியப்போ?

- பாரதியார்

**VI. அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்: - 3 x 8 = 24**

43. அ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

(அல்லது)

ஆ) ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்றுவிடுமா? இக்கருத்துகளை ஒட்டிச் செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

44. அ) "அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப் பயணம்" என்னும் தலைப்பில் கற்பனைக் கதை ஒன்று எழுதுக. (அல்லது)

ஆ) 'கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சைப் புகினும் கற்கை நன்றே' என்கிறது வெற்றிவேற்கை மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம் அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

45. அ) 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

(அல்லது)

ஆ) 'விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்' கட்டுரை எழுதுக.